மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,கோபிசெட்டிபாளையம்

முன்னிலை--திருமதி ஜி.கலாவதி,பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கோபிசெட்டிபாளையம்.

2017 ம் ஆண்டு ஜூன் திங்கள் 9 ம் நாள் வெள்ளிக்கிழமை
(2048 திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 26 ம் நாள்)

**உரிமையியல் பல்வகை மேல்முறையீடு எண்.1/2017**

1,கே.தெய்வசிகாமணி
2.கே.கருப்பணன் - மேல்முறையீட்டாளர்கள்

/எதிர்/
சுப்புலட்சுமி - எதிர்மேல்முறையீட்டாளர்

இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீடானது சத்தியமங்கலம் சார்பு நீமின்றம் அ.வ.எண்.99/2014 ல் இ.ம.எண்.384/2016 ல் 22.11.2016 ம் தேதி பிறப்பித்த உத்திரவு மற்றும் உத்திரவாணைக்கு எதிராக மனுதாரர்கள்/7,9 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

WEB COPY

விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களின் விவரம்

1,கே.தெய்வசிகாமணி
2.கே.கருப்பணன் - மனுதாரர்கள்/7,9 பிரதிவாதிகள்

/எதிர்/
சுப்புலட்சுமி - மனுதாரர்/வாதி

இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டுவழக்கானது 18.4.2017 ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்குரைஞர்கள் திருவாளர்கள் எஸ்.ராஜகோபால் மற்றும் சி.தங்கவேல் ஆகியோர்களும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு.சி.பார்த்திபன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தின் உத்திரவு, உத்திரவாணை, மேல்முறையீட்டு குறிப்பாணை மற்றும்வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் எமது ஆய்விலிருந்து வந்த இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை.

விசாரணை நீதிமன்றத்தில் இ.ம.எண்.384/2016 மனுவானது அசல் வழக்கில் 22.11.2016 ம்தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 13 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் 7 மற்றும் 9 பிரதிவாதிகள் ஆவார்கள்.1ம் மனுதாரர் 2ம் மனுதாரரின் மனைவி. எதிர்மனுதாரர் அவருடைய சகோதர,சகோதரி மற்றும் மற்றும் மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும்உ றுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.6 முதல் 22 பிரதிவாதிகள் வேறுவழக்குரைஞர்மூலம் ஆஜராகி வழக்கை நடத்தி வந்த நிலையில், வழக்கு விவரம் குறித்து முந்தைய வழக்குரைஞர் மனுதாரர்களுக்கு தகவல் பரிமாற்றம் செய்யாதகாரணத்தினால், மனுதாரர்களால் தொடர்ந்து வழக்கை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டு அசல்வழக்கில் 22.11.2016ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் வேண்டுமென்றோ அல்லது அஜாக்கிரதையாகவோ இருக்கவில்லை. அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு வெற்றி பெற அனைத்து முகாந்திரமும் உள்ளது. அதனால் 22.11.2016ம்தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

WEB COPY

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனு தாரர் பாகப் பிரிவினை மற்றும் இதரப்பரிகாரங்கள்கோரி மேற்படி அசல் வழக்கை தாககல் செய்துள்ளார். மனுதாரர்கள் வழக்குரைஞர் நியமனம்செய்திருந்ததும், மனுதாரர்களுக்கும் வழக்குரைஞருக்கும் இடையில் போதுமான தகவல் இல்லாததால் 22.11.2016ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகக் கூறியிருப்பது தவறு.மனுதாரர்கள் ஆஜராகாததாலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாராகளும் இ.ம.எண்.383/2916 மனுவின் மனுதாரர்களும் ஒரே வழக்குரைஞரை நியமித்துள்ளனர். நீதிமன்றம் கொடுத்த அவகாசத்தில் எதிர்வழக்குரை தாக்கல்செய்யவில்லை. மனுவில் கூறப்பட்டுள்ள காரணம் உண்மையல்ல. அசல் வழக்கை காலங்கடத்தும் நோக்கத்தில் இம்மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. விசாரணை நீதிமன்றத்தில் இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவிலலை. சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

5. விசாரணை நீதிமன்றம் இரு தரப்பு வாதங்களைக்கேட்டு, ஆவணங்களைப் பரிசீலனை செய்து, ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியிருந்த இ.ம.எண்.384/2016 மனுவுடன் இ.ம.எண்.383/2016 மனுவிற்கும் சேர்த்து

22.11.2016 ம்தேதி பிறப்பித்த பொது உத்திரவு மற்றும் உத்திரவாணையில் மனக்குறைவுற்ற இ.ம.எண்.384/2016 மனுவின் மனுதாரர்கள் இந்த உரிமையியல் பல்வகை மேல்முறை யீட்டை தாக்கல் செய்துள்ளார்கள்.

6. **மேல்முறையீட்டு மனுவின் சுருக்கம்.**

விசாரணை நீதிமன்றத்தின் உத்திரவு மற்றும் உத்திரவாணை சட்டத்திற்கும் சாட்சியத்திற்கும் விரோதமாக உள்ளது. விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கின் குறிப்புத் தாளை சரிவர பரிசீலிக்கவில்லை. இ.ம.எண்.384/2016 மனுவின் மனுதாரர்கள் தரபபில் மஞ்சள் காமாலை காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென்று வாதம் எடுக்கவில்லை. மனுதாரர்களின் வழக்குரைஞர் வழக்கு சம்பந்தமான தகவலை தெரிவிக்காத காரணத்தினால் 22.11.2016 ம்தேதி அசல் வழக்கல் ஒருதலைபட்ச முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றம் மனுதாரர்களுக்கு தங்கள் வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பளிக்காமல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மேல்முறையீட்டாளர்கள் எதிர்வழக்குரை தாக்கல்செய்து எதிர்மனுதாரர் வழக்குரைஞருக்கு 5.11.2016 ம் தேதி சாாவாகி உள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கருத்திற்கொள்ளவில்லை. இ.ம.எண். 384/2016 மனுவானது 14.12.2015 ம்தேதி தாக்கல்செய்யப்பட்டு, 20.9.2016 அன்று தான் கோப்பில்எடுக்கப்பட்டுள்ளது.எதிர்மனுதாரர்களுக்கு தங்கள் வழக்கை எடுத்துரைக்க விசாரணை நீதிமன்றம் போதுமான வாய்ப்பளிக்கவில்லை.விசாரணை நீதிமன்றம் மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல்செய்துள்ளதை கருத்திற்கொள்ளாமல், அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பித்துள்ளதால், அதை ரத்து செய்ய தாக்கலசெய்த மனுவினை அனுமதிக்காமல் தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்ரிவு மற்றும் உத்திரவாணையை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. <u>இம்மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சனை:</u>

விசாரணை நீதிமன்றத்தின் உத்திரவு மற்றும் உத்திரவாணை ரத்து செய்யப்படத்தக்கதா மற்றும் இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீடு அனுமதிக்கப்படத்தக்கதா?

8. இம்மேல்முறையீட்டில் இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியிடப் படவில்லை. இம்மேல்முறையீட்டில் வசதி மற்றும் சுருக்கம் கருதி, தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டதைப்போல், மேல்முறையீட்டாளர்கள் ''மனுதாரர்கள்''என்றும் எதிர்மேல்முறையீட்டாளர் 'எதிர்மனுதாரர் ' என்றும், அழைக்கப்படுவார்கள்.

WEB COPY

9. <u>பிரச்சனை எண்.1</u>

வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டது.விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.99/2014 வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர்கள் அசல் வழக்கில் 7 மற்றும் 9 பிரதிவாதிகள் ஆவார்கள்.மொத்தம்22 நபர்கள் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். 23.9.2014 ம்தேதியன்று 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வழக்குரைஞர் திரு.எஸ்.எ.முகமது முபாரக் அவர்களும், 6 முதல் 22 பிரதிவாதிகளுக்கு வழக்குரைஞர் திரு. சி.கே.ரமேஷ் அவர்களும் வழக்கேற்பிதழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

1 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 11.11.2014 ம்தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 11.11.2014 முதல் 24.8.2015 ம் தேதிவரையில் 1 முதல் 22 பிரதிவாதிகளுக்கு எதிர் வழக்குரை தாக்கல்செய்வதற்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. கால அவகாசம் கோரும்மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன்பேரில் பின்னிட்டு வழக்கு 7.9.2015 ம்தேதக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் 1 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் ஒருதலைபடுத்தப்பட்டுள்ளனர். எனவே வாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு 22.9.2015 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டு, பின் 13.10.2015 ம்தேதி வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளது 3.11.2015 ம்தேதி வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வாதிதரப்பு வாதம் கேட்கப்பட்டு 22.11.2016 ம் தேதியில் ஒருதலைபட்சமாக முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒருதலை பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி இ.ம.எண். 384/2016 மனுவானது 14.12.2015 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. மனுதாரர்கள் தரப்பில் தங்கள் வழக்குரைஞரிடமிருந்து தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தினால், வழக்கினை தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அசல்வழக்கில் மனுதாரர்கள் வழக்குரைஞர் மூலம் ஆஜராகியுள்ளனர் என்பதும், வழக்கின் முதல் வாய்தா தேதி 23.9.2014 என்பதும் மனுதாரர்கள்தரபபில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

11. எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விசாரணை நீதிமன்றம் 11.11.2014, 16.12.2014, 28.1.2015, 3.3.2015, 13.4.2015, 16.6.2015, 23.7.2015, 24,8,2015 ,மற்றும் 7.9.2015

(No further adjournment) ஆகிய தேதிகளுக்கு வழக்கை ஒத்தி வைத்துள்ளது. 7.9.2015 அன்று மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை. இந்த மனுதாரர்கள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் ஒருதலைப் படுத்தப்பட்டுள்ளனர். 22.11.2016 அன்று ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. வழக்குரைஞர் முலம் ஆஜரான மனுதாரர்களுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்தால் போதுமான வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், ஒருதலைபடுத்தப் பட்டுள்ளனர். முந்தைய வாக்குரைஞர் தகவல் பரிமாற்றம் செய்யாததினால் தங்களால் தொடர்ந்து வழக்கைநடத்தஇயலாத சூழ்நிலை ஏற்பட்டதாக மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ள காரணம் நம்பத்தகுந்ததாக இல்லை.தகவல் பரிமாற்றம் செய்யப்படவில்லையென்று என்று கூறியுள்ளதிலிருந்தே மனுதாரர்கள் தங்கள் வழக்கு விவரங்களை அக்கறைகொண்டு தெரிந்து கொள்ளவில்லையென்பதை அறிய முடிகிறது. வழக்கின் தரப்பினர்கள் நீதிமன்ற அழைப் பாணையை பெற்றவுடன், மனுதாரர்கள் வழக்குரைஞர் மூலம் ஆஜராகியிருந்தும் அக்கறை கொண்டு வழக்கு நடவடிக்கைகளையும் வாய்தா தேதிகளையும் நேரடியாக ஆஜராகியோ அல்லது தங்கள் வழக்குரைஞர் மூலமாகவோ அறிந்து கொள்ள வேண்டும். இது வழக்கின் தரப்பினர்களின் கடமையாகும்.தற்போது இன்றைய காலக்கட்டத்தில் தகவல்தொடர்பு என்பது மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கைபேசிஇல்லாத நபர்களே இல்லையென்றே கூறலாம். தங்கள்மீதுவழக்கு நிலுவையில் உள்ளது என்பதைதெரிந்திருந்தும், 23.9.2014 முதல் 16.11.2015 வரை வழக்குரைஞரை மனுதாரர்கள் தொடர்பு கொண்டு,வழக்கு பற்றிய விவரத்தை அக்கறைவுடன் கேட்ட தெரிந்துகொள்ள முயற்சிசெய்யவில்லை என்பது மனுதாரர் களுக்கு வழக்கின்மீது கொண்டிருந்த அக்கறையின்மை,அலட்சியத்தையும் காட்டுகிறது. மனுதாரர்கள் வாதத்தின்படி பார்த்தாலும் மனுதாரர்களுக்கு 22.11.2016 ம் தேதி ஒருதலை பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் எப்போது,எவ்வாறு யார் மூலம் தெரியவந்தது என்பதற்கு எந்தவிளக்கமும் கூறப்படவில்லை. ஆனால் ஒருதலைபட்ச தீர்பபாணை பிறப்பிக்கப் ட்ட 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதிலிருந்து,மனுதாரர்கள் வேண்டுமென்றே இருந்துள்ளனர் என்பது தெரிகிறது.மனுதாரர்கள் வழக்குரைஞர் மூலம் ஆஜராகியிருந்தும் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல்செய்யாமல் ஒருதலைபடுத்தப் பட்டுள்ளனர். மேலும் இ.ம.எண்.384/2016 மனுவானது ( Order 9 Rule 13 of CPC petition adjd. to 5.11.2016 for enquiry) 5.11.2016 ம்தேதியன்று விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர் என்பது

WEB COPY

தெரிய வருகிறது. அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் மனுதாரர்கள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் ஒருதலைபடுத்தப்பட்டு, பின் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அதை ரத்து செய்ய தாக்கல் செய்திருந்த இ.ம.எண்.384/2016 மனு விசாரணைக்காக நிலுவையில் இருந்து போது மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர்.விசாரணை நீதிமன்றம் எதிர்வழக்குரை தாக்கல்செய்ததை கருத்திற் கொள்ள வில்லையென்று மனுதாரர்கள்தரப்பில் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை வழக்குரையை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் உள்பட பெரும்பாலான பிரதிவாதிகள் அரியப்பம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதெரிகிறது. ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் பிரதிவாதிகள் ஒருவருக்கொருவர் வழக்கு விவரம்பற்றி பேசிக்கொள்ள வாய்ப்பு அதிகம்உள்ளது. ஆனால்வழக்குரைஞர் தகவல் கொடுக்காததால் வழக்கு விவரம்தெரியவில்லையென்பது நம்பும்படியாக இல்லையென்பதால், மனுதாரர்கள் வழக்கை நடத்த முன்வராமல் இருந்துவிட்டு,உண்மை விவரங்களை மறைத்து பிரமானப் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரிகிறது.

WEB COPY

12. அசல் வழக்கில் அழைப்பாணையை பெற்றுக் கொண்ட மனுதாரர்கள் தங்கள் வழக்குரைஞரை நேரில் சந்தித்ததாகவோ தொலைபேசியில்தொடாபு கொண்டதாகவோ கூறவில்லை. முந்தைய வழக்குரைஞர் தகவல் பரிமாற்றம் செய்யாததினால் தங்களால் தொடர்ந்து வழக்கை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டதாக கூறியுள்ள காரணத்தில் உண்மையில்லை என்பது ஆவணங்கள் மூலம் நிரூபணமாகிறது.தகவல் பரிமாற்றமே இல்லையென்று கூறியுள்ள நிலையில், குறிப்பாக எப்போது எந்த சூழ்நிலையில் எவ்வாறு அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிய வந்தது என்ற விவரமும் கூறப்படவில்லையென்பதை நோக்கும்போது மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இ.ம.எண்.159/2016 இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் மனுதாரர்கள் நீதிமன்றம் மூலம் சார்வான அறிவிப்பை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென்றும் அந்த மனுவிலும் ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக விசாரணை நீதிமன்றம் தனது உத்திரவில் குறிப்பிட்-டுள்ளதை மனுதாரர்கள் மறுக்கவில்லை.மனுதாரர்கள் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகி, எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லையென்பது தெளிவாக தெரிய வருகிறது. வழக்கில்இரு தரப்பினருக்கும் போதுமான வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பது மறுப்பதற்கில்லை. மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு வராமல் இருந்ததற்கோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததிற்கோ கூறும் காரணம் உண்மையாகவும் நம்பத்தகுந்ததாகவும் அந்த

காரணத்திற்காக மனுவை ஏற்றுக்கொள்ளும்படியாகவும் இருக்க வேண்டும். ஆனால் இம்மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்ததாக இல்லை.தகவல் பரிமாற்றம் செய்யாததினால் தங்களால் தொடர்ந்து வழக்கை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டதாக கூறியுள்ள காரணம் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து,மனுவை அனுமதிக்க போதுமானதாகவும் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் இல்லையென்பதால், இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் விருப்பம் கொள்ளவில்லை.எனவே மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில், இம்மனு அனுமதிக்கப்படத் தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

13. இறுதியில், இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீடு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் அ.வ.எண்.99/2014 ல் இ.ம.எண்.384/2016 மனுவில் 22.11.2016 ம்தேதி பிறப்பித்த உத்திரவு மற்றும் உத்திரவாணை உறுதி செய்யப்படுகிறது.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் நேரில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு 2017 ம் ஆண்டு ஜூன் திங்கள் 9-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

WEB COPY

(Sd.)G.Kalavathi
மூன்றாம் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி,கோபிசெட்டிபாளையம்.

பின் இணைப்பு - இல்லை

(Sd.)G.Kalavathi
மூன்றாம் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி,கோபிசெட்டிபாளையம்

WEB COPY